சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.02.09.2025.
OS.No. 748/2018
PW 1 : ஷியாமளா தேவி (வயது 62 ) க/பெ.இளங்கோவன்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

08.12.2013 ஆம் தேதியன்று எனது தாயார் இறந்தார். அப்போது பங்கு பிரித்துக்கொடுத்தால் தான் பாடியை எடுக்க முடியும் என்று நான் கூறினேனா என்றால் இல்லை. எனது அம்மாவின் அப்பா சுருட்டு கம்பெனி வைத்திருந்தார். யூனியன் சிகார் என்ற பெயரில் பேக்டரியை எனது அம்மா வைத்திருந்தாரா என்றால் இல்லை, எனது அம்மாவின் அப்பா வைத்திருந்தார். எனது அம்மாவின் அப்பா பெயர் நீலமேகம். மேற்படி பேக்டரியை உறையூரில் நடத்தி வந்தாரா என்றால் ஆமாம்.

மேற்படி பேக்டரியை எனது அம்மா தான் நடத்தி வந்தார் என்றும் வழக்கிற்காக எனது தாத்தா நடத்தி வந்ததாக பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா அவரது பணி காலம் வரை ஏட்டாகவே இருந்தாரா அல்லது பதவி உயர்வு பெற்றாரா என்றால் ஏட்டாக இருந்து, ஏஎஸ்ஐ ஆக இருந்து, இன்ஸ்பெக்டராக இருந்து பணி ஓய்வு பெற்றார். அவரது பணி காலம் 30 வருடம் இருக்குமா என்றால் இருக்கலாம். எனது தகப்பனாருக்கு பணி பதவி உயர்வு கொடுத்து, பணி ஓய்வு கொடுத்தார்கள் என்றால் சரிதான். இன்ஸ்பெக்டராக பதவி உயர்வு கொடுத்து, பணி ஓய்வு கொடுத்தார்கள்.

எனது அப்பா அரசு அலுவலராக இருந்ததால், தனியாக தொழில் செய்ய முடியாது என்றால் சரிதான். எனது அம்மா தான் மேற்சொன்ன சுருட்டு கம்பெனியை நடத்தி வந்தார் என்றும், எனது அப்பா நடத்தவில்லை என்றால் சரியல்ல எனது தாத்தா தான் நடத்தி வந்தார். அந்த கம்பெனியில் 30 பேர் வேலை பார்த்தார்களா என்றால் அந்த அளவிற்கு பெரிய கம்பெனி இல்லை. எவ்வளவு பேர் வேலை பார்த்தார்கள் என்று எனக்கு தெரியாது.

எனது பங்கிற்கு உமாதேவியும், ஸ்ரீதேவியும் பணம் கொடுத்தார்களா என்றால் இல்லை. 10.08.2014 ல் எனது தாயார் இறந்தாரா என்றால் இல்லை 2013 லேயே எனது தாயார் இறந்து விட்டார். 10.08.2014 ல் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் கண்டுள்ளவாறு ஸ்ரீதேவிக்கும் உமாதேவிக்கும் ரசீது கொடுத்தேனா என்றால் இல்லை. நான் பொதுவாக ஷியாமளா இளங்கோவன் என்று கையொப்பம் செய்வேனா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும 10.08.2014 ஆம் தேதியிட்ட ஆவணத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை. எனது கணவர் பெயர் இளங்கோவன். எனது மாமனார் பெயர் சண்முகம்.

என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது கணவருடையதா என்றால் இல்லை. இந்த வழக்கில் எனது கணவரை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் எனது கணவர் கையொப்பம் செய்துள்ளார் என்பதால் தான், நான் அவரை சாட்சியாக விசாரிக்க மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல.

பொன்மாணிக்கம் மகன் பாலாஜி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. திருப்பதி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. சந்தான முதலியார் என்பரை தெரியுமா என்றால் தெரியாது. அவர் கரூர் மாவட்டத்தில் இருக்கிறார் என்றால் தெரியாது. 10.08.2014 ல் நான் ரூ.30 லட்சம் பணம் வாங்கிக்கொண்டு, ரசீது எழுதி கொடுத்துள்ளேன் என்றும் அதனை தற்போது, பார்த்துவிட்டு மறுத்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் மேற்கண்ட ரசீதில் 10 பவுன் நகையையும் நான் வாங்கிக்கொண்டு, அதில் கண்டுள்ள விவரங்களை வழக்கிற்காக மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

உமாதேவிக்கும், ஸ்ரீதேவிக்கும் எனது தாயார் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்ததாக எனது வழக்கில் நான் கூறியுள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, ஆனால் எனது தாயார் சொத்துக்களை எனது சகோதரிகளுக்கு எழுதி கொடுத்து பதிவு செய்துள்ளதாக கேள்விபட்டேன். வழக்குரை பத்தி 10 ல்

05.10.2012 ல் ஸ்ரீதேவிக்கு ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்ததாகவும், 10.10.2012 ல் ஸ்ரீதேவிக்கு மற்றொரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளதாகவும், 17.10.2012 ல் உமாதேவிக்கு ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் 05.10.2012 தேதியிட்ட வா.சா.ஆ.17 ஆவணத்தில் சொத்தின் மதிப்பு ரூ.1,92,625/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அவ்வாறு தான் சொல்லப்பட்டுள்ளது. 10.10.2012 ஆவணமான வா.சா.ஆ 18 ல் சொத்தின் மதிப்பு ரூ.6,87,000/- என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், அவ்வாறு தான் அதில் போடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.19 ல் சொத்தின் மதிப்பு ரூ.15,00,000/- என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் சொல்லப்பட்டுள்ளது.

எனக்கு 10.08.2014 ல் உள்ள ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள ரூ.30 லட்சம் தொகை மற்ற ஆவணங்களில் கண்டுள்ள தொகையை விட கூடுதலாக எனக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த தொகையை நான் பெறவில்லை. நான் அந்த தொகையையும், அதில் சொல்லியுள்ள நகையையும் வாங்கி கொண்டு தற்போது வழக்கிற்காக அதனை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எனது அப்பா இறந்த பிறகு எனது அம்மாவை எனது சிறிய தங்கை ஸ்ரீதேவி வீட்டிற்கு கூட்டிசென்றுவிட்டார்கள். 2006 ல் எனது தகப்பனார் இறந்தார் என்றால் சரிதான். எனது அம்மா ஆனந்த் நகர், பிச்சாண்டார்கோவில், மண்ணச்சநல்லூர் தாலுக்காவில் தான் இருந்தார் என்றால் சரியல்ல. நான் பணத்தை வாங்கிக்கொண்டுமேற்படி ஆவணங்களின்பேரில் பட்டாவை மாற்றிக் கொண்ட விவரம் தெரிந்து கொண்டு வழக்கிற்காக பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

அனைத்து சொத்துக்களும் எனது அம்மாவின் சொத்துககள் என்றும் எனது அப்பாவிற்கு எந்த சொத்துக்களும் இல்லை என்றால் , எனது அப்பாதான் சொத்துக்களை எனது அம்மா பெயரில் வாங்கிகொடுத்தார். எனது அப்பாவிற்கு

பென்சன் மாதத்திற்கு ரூ.1300 என்றும், Commuted Value ரூ.5435 என்றும் எனது தகப்பனார் பென்ஷன் புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல Commuted Value ரூ.54351 என்று சொல்லப்பட்டுள்ளது.

எனது தகப்பனாரின் ஓய்வூதிய கூட்டு தொகையே ரூ.5435/- என்று கூறினால் சரியல்ல. நான் எனது வழக்கு பிராதில் தாவா சொத்திற்கான மதிப்பு குறைவாக கணக்கிடப்பட்டு அதற்காக செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் சாலை விபத்தில் இறந்தார். எனது தாயார் சிறுநீரக இழப்பினால் இறந்தார். எனது தகப்பனார் இறுதி சடங்கில் நான் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல நான் கலந்து கொண்டேன்.

சாலை வாகன விபத்து இழப்பீடு தொகையை நான் வாங்கவிடவில்லை என்றால் சரியல்ல, கமிஷனர் வீட்டிற்கு வந்தபோது, எனது தாயார் விபத்தினை ஏற்படுத்தியவரை கண்டுபிடித்து கொடுக்குமாறு சொன்னார், அந்த தொகையை வேண்டாம் என்று கூறிவிட்டார். எனது அப்பா இறந்த பிறகு எனது அம்மாவை ஸ்ரீதேவி தான் கவனித்து வந்தார் என்றால சரிதான், ஆனால் அழைத்து கொண்டு சென்று மிரட்டி கையெழுத்துவாங்கி கொண்டார்.

எனது அம்மா மிரட்டினால் பயப்படமாட்டார்கள் என்றும், ஸ்ரீதேவி அவ்வாறு நான் சொல்வது போல் மிரட்டி கையொப்பம் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் எனது தாயாருடைய சொத்துக்கள் என்பதால் அதனை இஷ்டபட்டு யாருக்கு வேண்டுமானாலும் எழுதி வைக்கலாம் என்றால் நான் பெரிய பொண்ணு எனக்கு தரவேண்டாமா. எனக்கு 30 லட்சம் பணமும், 10 பவுன் நகையும் கொடுத்துவிட்டார்கள் என்றால் இல்லை. எனது பங்கு ஏற்கனவே எனக்கு கொடுத்து செட்டில்செய்து விட்டார்கள் என்றால் சரியல்ல.

**<u>ம.வி</u>** - இல்லை.

/ signed/
ஷியாமளாதேவி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி